# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 11 புதன்கிழமை 26.03.2025 கதிர் 162



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## அமெரிக்கத் தூதுவர் - ரிஷாத் சந்திப்பு சமகால விடயங்கள் தொடர்பில் பேச்சு



கொழும்பு, மார்ச் 26

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்கும் இடையிலான சந்திப்பு இன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியதாக ரிஷாத் பதியுதீன் எம்.பி. தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் எமது நீண்டகால தொடர்புகள்மற்றும்நிலைபேறான தன்மை குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, புனித ரமழான் மாதத்தில் காசா மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும்

7

# யாழ்.பல்கலையில் பதற்றம்!

## மாணவர்களின் போராட்டத்தைத் தடுத்து நிறுத்திய பொலிஸ்







யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டமையால் அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களினால் இன்று புதன்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

7

## யாழ்ப்பாணத்தில் வெப்பநிலை உச்சம்! நீராகாரங்களை அதிகம் அருந்துங்கள்!!

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுகோள்




யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் குடாநாட்டில் வெப்பநிலை அதிகரித்துள்ளமையால் உடல் வெப்பத்தைத் தணிக்கக் கூடிய நீராகாரங்களை அதிகமாக அருந்துமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

### ஏப்ரல் மாத நாடாளுமன்ற அமர்வில்

## தென்னக்கோனைப் பதவி நீக்கும் யோசனையை நிறைவேற்றுவோம்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 26

"தேசபந்து தென்னக் கோனைப் பதவி நீக்குவதற்கான யோசனை எந்த வகையிலும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையாது. ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகளின் போது குறித்த யோசனையை

7

## இலங்கை – இந்திய மீனவர்கள் வவுனியாவில் பேச்சு

வவுனியா, மார்ச் 26

இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை வவுனியாவில் இன்று நடைபெற்றது.

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள அருந்ததி தனியார் விருந்தினர் விடுதியில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

7








- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஜனாதிபதி செயலகத்திற்குள் துப்பாக்கி தோட்டாவை எடுத்துச் சென்ற இராணுவ வீரர்!

கொழும்பு, மார்ச் 26

ஜனாதிபதி செயலகத்திற்குள் துப்பாக்கி தோட்டாவை மறைத்து வைத்துக் கொண்டு உள்நுழைய முற்பட்ட இராணுவ வீரர் ஒருவர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றி வருவதுடன், இராணுவ சமிக்ஞைப் படையில் கடமையாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இராணுவ வீரர் கடந்த 20 ஆம் திகதி விடுமுறை பெற்று லுனுகம்வெஹெரவில் உள்ள தனது இல்லத்திற்கு சென்று மீண்டும் பணிக்கு வந்துள்ளார்.

அதன்போது ஜனாதிபதி செயலகத்தின் பொது நுழைவாயிலுக்கு அருகில் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள், சிப்பாயின் பையை சரிபார்க்க ஸ்கேனர் ஒன்றைப் பயன்படுத்திய வேளையில், பையில் வு-56 துப்பாக்கிக்கான தோட்டா கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# யாழ் பல்கலை மாணவர் போராட்டம் இடைமறித்த பொலிஸாரால் பதற்றம்!

கொழும்பு, மார்ச் 26



யாழ்ப்பாண பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களால் நீண்ட கால வேலையில்லா பிரச்சினைக்கு தீர்வு கோரி போராட்டம் முன்னெடுக்கபட்ட நிலையில், பேரணியை இடை நிறுத்துமாறு பொலிஸார் தெரிவித்தமையால் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து ஆரம்பித்த பேரணியை பொலிஸார் தடுத்த போதும் போராட்டக்காரர்கள் முன்னோக்கி சென்றுள்ள நிலையில், தற்போது இடை மறிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பேரணிகள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு தேர்தல் சட்டத்தின் படி தடை செய்யப்பட்டுள்ளதால் பொலிஸார் தற்போது பல்கலைக்கழக மாணவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பேரணிக்கு நீதிமன்றம் ஊடாக தடையுத்தரவு பெறும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

# விசேட கற்கைகளுக்கான அனுமதிகளுக்கு இனி நாடளாவிய ரீதியில் பொதுப் பரீட்சை!

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் நுண்கலை மற்றும் குறிப்பிட்ட சில சிறப்பு பட்டப்படிப்பு அனுமதிக்குத் தேவையான பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட பரீட்சையை அறிமுகப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் தனித்தனியாக மேற்கொண்டு வந்த இந்தத் தெரிவுப் பரீட்சைகளை இனி பரீட்சைகள் திணைக்களம் நடத்தும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாற்றம் குறித்த முக்கியமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இதுவரை, நுண்கலை, மொழிபெயர்ப்பு கற்கைகள், விளையாட்டு விஞ்ஞானம், உடற்கல்வி போன்ற பாடப் பிரிவுகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தனித்தனியாக பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளை நடாத்தி வந்தன. ஆனால், நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்களுக்கான குழுவின் (கோப்) பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகளின் காரணமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொது முறைமையைப் பின்பற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆகியோர் பங்கேற்று, பரீட்சைகள் திணைக்களத்தின் கீழ் இந்தப் பரீட்சைகளை நடத்தும் வாய்ப்புகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இந்த மாற்றம், மாணவர் தெரிவில் வெளிப்படைத்தன்மை, ஒருமைப்படைவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், தற்போதைய முறையில் உள்ள குறைகளையும் சரி செய்ய உதவும் என நம்பப்படுகிறது.



# 2050 இல் இலங்கை ஏழ்மை நிலைக்கு மீண்டும் தள்ளப்படும்



கொழும்பு, மார்ச் 26

இந்தியாவின் ஆதரவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் உதவி நிராகரிக்கப்பட்டால் இலங்கை வளர்ச்சியடையாது என்று கூறியுள்ளார்.

ஒரு நிகழ்வில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் ஆதரவு நிராகரிக்கப்பட்டால், இலங்கை வளர்ச்சியடையாது, 2050 இல் இன்னும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படும் என்றார்.

“இந்தியா நமது நெருங்கிய அண்டை நாடு. அது அமெரிக்கா, ரஷ்யா அல்லது சீனா அல்ல. எனவே இலங்கை செய்ய வேண்டியது இந்த உறவை சிறப்பாகப் பயன்படுத்துவதாகும். இலங்கை தனது வேலையை இந்தியா மூலம் செய்ய வேண்டும். அந்த நேரத்தில் இலங்கை 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறவில்லை என்றால், நமது நாடு என்னவாக இருந்திருக்கும்?” என்று அவர் பொருளாதார நெருக்கடியை நினைவூட்டி கேள்வி எழுப்பினார்.

இந்தியாவின் அதானி குழுமத்தின் முதலீட்டு முயற்சி இலங்கைக்கு மேலும் பல முதலீடுகளைக் கொண்டு வந்ததாக ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

“இந்தியா எங்கள் நட்பு நாடு. அவர்கள் எதற்கும் எங்களுக்கு உதவ தயாராக உள்ளனர். எனவே இந்த ஆதரவைப் பற்றிக் கொள்வதே எங்கள் ஒரே தீர்வு. முதலீட்டை முன்னுரிமையாகக் கொண்டு இலங்கை முன்னேற இதுவே ஒரே வழி. இந்தியாவை நாம் நிராகரித்தால், நாம் ஒருபோதும் வளர்ச்சியடைய மாட்டோம்,” என்று அவர் எச்சரித்தார்.

எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், முன்னேற இந்தப் பாதையைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி கூறினார். (ஐ)

# பேராசிரியரின் மனைவியும் சிகிச்சை பலனின்றி மரணம்



கொழும்பு, மார்ச் 26

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் பாரவூர்தியுடன் வான் மோதிய விபத்தில் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்த களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி என்.டி.ஜி. கயந்த குணேந்திரவின் மனைவியும் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் இன்று உயிரிழந்தார்.

இதன்படி, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி களனி பல்கலைக்கழக தத்துவ ஆய்வுகள் துறையின் உளவியல் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய 46 வயதுடைய பேராசிரியர் ஒருவர் தனது மனைவி, 3 பிள்ளைகள் மற்றும் மனைவியின் தாய் மற்றும் சகோதரனுடன் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்து விட்டு வானில் மீண்டும் வீடு நோக்கிப் பயணித்தனர். இதன்போது குருநாகல் பகுதியிலிருந்து மீரிகம நோக்கிப் பயணித்த இந்த வானானது வீதியில் பயணித்த பாரவூர்தி ஒன்றின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது, வானில் பயணித்த களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், அவரது மனைவியும், 3 பிள்ளைகளும் மனைவியின் தாய் மற்றும் சகோதரனும் படுகாயமடைந்த நிலையில் மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் உயிரிழந்தார்.

இதனையடுத்து விபத்தில் படுகாயமடைந்த களனி பல்கலைக்கழக பேராசிரியரின் மனைவியும், 3 பிள்ளைகளும், மனைவியின் தாய் மற்றும் சகோதரனும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

பின்னர் களனி பல்கலைக்கழக பேராசிரியரின் 3 பிள்ளைகளும் மனைவியின் தாயும் சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில் மனைவியின் சகோதரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கில் சிகிச்சை பெற்ற வந்த களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியரின் மனைவியும் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# லாப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு இன்றி விநியோகம்




கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் நாடளாவிய ரீதியாக லாப்ஸ் எரிவாயு எவ்வித தட்டுப்பாடும் இன்றி விநியோகிப்பதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. இலங்கை வாகன வாடகை

நுவரெலியா பகுதியில் லாப்ஸ் எரிவாயு பற்றாக்குறை இருப்பதாக செய்தி வெளியாகி இருந்தன.

இந்த நிலையில், இது தொடர்பான தகவல்களை தெளிவுபடுத்திய நிறுவனம், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிவாயு விற்பனை முகவர்களுக்கும் தேவையான அளவு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை எந்தவொரு பகுதியிலும் எரிவாயு பற்றாக்குறை இருந்தால், 1345 என்ற விசேட எண்ணை தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யுமாறு குறித்த நிறுவனம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# இலங்கையில் வேகமாக பரவும் வைரஸ் தொற்று




கொழும்பு, மார்ச் 26

நாட்டில் தற்போது பரவிவரும் சிக்குன் குனியா நோய் குறித்து பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதன்படி, பிரதேச மட்டத்திலும் சிக்குன் குனியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்படும் நோயாளர்களைவிட அதிகளவானவர்கள் சமூக மட்டத்தில் காணப்படலாம். நுளம்புகள் மூலமாகவே சிக்குன்குனியா நோய் பரவுகிறது.

சிக்குன் குனியா நோயைப் போன்று டெங்கு நோய் தொடர்பிலும் எதிர்காலத்தில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே, நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அதேபோன்று நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக பதிவு செய்யப்பட்ட வைத்தியரை நாடி தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ)

# பிறப்புச் சான்றிதழ் தொடர்பில் முக்கிய தகவல்



*கொழும்பு, மார்ச் 26*

*நாட்டிலுள்ள அனைத்து தனிநபர்களுக்கும் டிஜிட்டல் தேசிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதை 2 ஆண்டுகளுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் சமந்த விஜேசிங்க தெரிவித்துள்ளார்.*

*திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் நேற்று (24.03.2025) நடைபெற்ற தேசிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*“தேசிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் செயல்முறை 15 ஆண்டுகளுக்கு முன்பு தகவல் தொழில்நுட்பம் நிறுவனம், பதிவாளர் நாயகம், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் பிற அரசுத் துறைகளால் ஆரம்பிக்கப்பட்டது.*

*நாட்டில் அத்தியாவசியமான பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு தரவு அமைப்பு என்ற அடிப்படை தரவு அமைப்பு சட்டப்பூர்வமாக டிஜிட்டல் வடிவத்தில் உருவாக்கப்பட்டால், கடவுச்சீட்டு அடையாள அட்டை அல்லது வேறு எதையும் பெற்றாலும் இந்த தரவு அமைப்பு மற்ற அனைத்து செயல்முறைகளுக்கும் உதவியாக இருக்கும்.*

*நாடு முழுவதும் 45 மில்லியன் ஆவணங்களிலிருந்து தரவை ஸ்கேன் செய்து உள்ளிடுவதன் மூலம் இந்த செயல்முறையை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இந்த திட்டம் இப்போது துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.*

*எதிர்காலத்தில், அனைத்து இலங்கை குழந்தைகளுக்கும் பிறக்கும்போது ஒரு அடையாள எண் வழங்கப்படும். இலங்கை வாகன வாடகை*

*அப்போதுதான் ஒழுங்கற்ற செயல்முறைகளைக் குறைத்து, குடிமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்க முடியும் என நாங்கள் நம்புகிறோம்.*

*டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழின் ஒரு தனித்துவமான அம்சம் என்னவென்றால், அது சிங்களம் மற்றும் ஆங்கிலம் உட்பட இரண்டு மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.” என அவர் குறிப்பிட்டுள்ளார்.*






ஜாஹிர் உசேன் கொலை வழக்க் சி.பி.ஐ.,க்கு மாற்றக்கோரி மனு!

: ஓய்வு பெற்ற சிறப்பு எஸ்.ஐ., ஜாஹிர் உசேன் கொலை வழக்கை சி.பி.ஐ.,க்கு மாற்ற வலியுறுத்தி, உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் முன்னாள் எஸ்.ஐ., ஜாஹிர் உசேன் மார்ச் 18ம் தேதி அதிகாலை, 5:40 மணிக்கு மசூதியில் தொழுகையை முடித்து வெளியே வந்தபோது வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இவ்வழக்கு தொடர்பாக, இதுவரை மொத்தம் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொலை வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. இந்நிலையில் இன்று (மார்ச் 26) ஜாஹிர் உசேன் கொலை வழக்கை சி.பி.ஐ.,க்கு மாற்ற வலியுறுத்தி உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரணைக்கு எடுத்தது மனித உரிமைகள் ஆணையம் ; உரஅயஎ சு஌பாவள ஊழஅஎளௌளஎழை ; நேடடயளீழடஎஉந

மனுவை விசாரித்த நீதிமன்றம், 'டி.ஜி.பி.,- சி.பி.ஐ.,க்கு நோட்டீஸ் அனுப்பி தற்போதைய நிலை குறித்து 8 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்' என உத்தரவிட்டது. (ஐ)

# வீடு ஒதுக்காமல் இழுத்தடிப்பதால் ஆவேசம் தி.மு.க., செயலாளர் ஓட்டம்



கோவையில், முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்த, அடுக்குமாடி குடியிருப்புகளை ஒதுக்காமல் இருப்பதால், துாய்மை பணியாளர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். சமரசம் செய்ய வந்த, தி.மு.க., வார்டு செயலாளரிடம் அடுக்கடுக்காக கேள்விகள் கேட்டதால், அவர் ஓட்டம் பிடித்தார்.

கோவை மாநகராட்சியில் பணிபுரியும் துாய்மை பணியாளர்கள், உக்கடம் சி.எம்.சி., காலனியில் வசித்தனர். மேம்பாலப் பணிக்காக, அவர்களது வீடுகளை இடிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

அதேயிடத்தில் குடியிருப்பு கட்டித்தருவதாக உறுதி கூறியதால், வீடுகளை காலி செய்தனர். மொத்தம், 520 வீடுகள் கட்ட வேண்டும் முதல்கட்டமாக, 222 வீடுகளே கட்டப்பட்டிருக்கின்றன. கடந்தாண்டு அக்., 31ல் 'வீடியோ கான்பரன்ஸ்' முறையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

துாய்மை பணியாளர்களில், தி.மு.க.,வை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க, கட்சி நிர்வாகிகள் அழுத்தம் கொடுப்பதால், ஐந்து மாதமாகியும் இன்னும் பயனாளிகளுக்கு ஒதுக்கவில்லை. இச்சூழலில், நாளை (26ம் தேதி) குலுக்கல் முறையில் வீடு ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. 'பேரு வச்சீங்களே... சோறு வச்சீங்களா?' ஊரு பூரா உருண்டு புலம்பும் பறக்கும் படை தி.மு.க.,வினர் தலையிட்டு குலுக்கலை நிறுத்தியுள்ளனர். இதையறிந்த துாய்மை பணியாளர்கள், பூட்டை உடைத்து குடியிருப்புகளுக்குள் செல்ல முடிவெடுத்து, நேற்று குடியிருப்பு வளாகத்தில் திரண்டனர். தகவலறிந்த போலீசார் விரைந்து வந்து தடுத்தனர். துாய்மை பணியாளர்களை சமரசம் செய்ய, தி.மு.க., வார்டு செயலாளர் ஆனந்தன் அங்கு வந்தார். ஸ்டாலின் திறந்து 6 மாசமாச்சு இன்னும் வீடு ஒதுக்கப்படாத அவலம் உஅ அ.ம.**stalin coimbatore slum cleare** அவர் கூறுகையில், "அதிகாரிகளிடம் நான் தான் பேசினேன். 222 வீடுகளுக்கு, 308 டோக்கன் போடுகிறார்கள். வெள்ளை டோக்கன் வந்தால் வீடு கிடையாது நீல நிற டோக்கன் வந்தால் வீடு என கூறுகிறார்கள். இதை ஏற்க முடியுமா. 222 வீடுகளுக்கு, 222 டோக்கன் போட்டால் போதும் என கூறியுள்ளேன்," என்றார். அவரை அங்கிருந்தவர்கள் சூழ்ந்து, 'இந்தப் பிரச்னைக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம். எங்களுக்கு இங்கு வீடு இருக்கிறது. உங்களுக்கு இங்கு வீடு இல்லை நீங்கள் ஏன் வருகிறீர்கள். ஒரு வீடு இல்லாமல் தகர கொட்டகையில் வசிக்கிறோம். ஏற்கனவே வீடு வாங்கியவர்களுக்கு இரண்டாவது வீடு, மூன்றாவது வீடு கேட்பது ஏன்' என, வாக்குவாதம் செய்தனர். இரு தரப்புக்கும் இடையே, காரசாரமாக வாக்குவாதம் ஏற்பட்டு, மோதிக்கொள்ளும் சூழல் உருவானது. இதையடுத்து, ஆனந்தன் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு இடத்தை காலி செய்தார். இதன்பின், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி நிர்வாக பொறியாளர் வெங்கட், உதவி பொறியாளர் ராஜேஷ் வந்து, 'அடுத்த மாதம் குலுக்கல் போடலாம்' என, கூறினர். அதை பொதுமக்கள் ஏற்காததால், 'அலுவலகத்துக்கு நாளை (இன்று) வாருங்கள் பேசிக் கொள்ளலாம்' என்று கூறி அனைவரையும் அனுப்பி வைத்தனர். (ஐ)

# ஹீரோ பைக்குகள் முன்பதிவு துவக்கம்

*'ஹீரோமோட்டோகார்ப்' நிறுவனத்தின் 'எக்ஸ்ட்ரீம் 250ஆர்' மற்றும் 'எக்ஸ்பல்ஸ் 210' ஆகிய பைக்குகளின் முன்பதிவுதுவங்கிஉள்ளன. வினியோகம், விரைவில் துவங்கும்என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*இது, இந்நிறுவனத்தின் சக்தி வாய்ந்த பைக்காகும். இதில், புதிய 249 சி.சி., சிங்கிள் சிலிண்டர், லிக்விட் கூல்டு இன்ஜின் பயன்படுத்தப்படுகிறது. இந்த பைக்கில், யூ.எஸ்.டி., போர்க் மற்றும் அட்ஜஸ்டபில் சஸ்பென்ஷன்கள், டூயல் சேனல்ஏ.பி.எஸ்., கொண்ட டிஸ்க் பிரேக்குகள், 11.5 லிட்டர் பெட்ரோல் டேங்க் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. இதன் எடை, 167.7 கிலோவாக உள்ளது. ஒரே வகையில் வரும் இந்த பைக், இரண்டு நிறங்களில் கிடைகிறது.(ஐ)*






# பாம்பன் புதிய ரயில் பாலத்தை ஏப்.,6ல் திறக்கிறார் பிரதமர் மோடி!

*பாம்பன் புதிய ரயில் பாலம் வரும் ஏப்ரல் 6ம் தேதி பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்படும் என தென்னக ரயில்வே பொது மேலாளர் ராமேஸ்வரத்தில் அளித்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.*

*பாம்பனில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரயில் பாலம் மற்றும் ராமேஸ்வரத்தில் நடைபெற்று வரும் ரயில் நிலைய கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காகவும் பிரதமர் வருகையை ஒட்டி திறப்பு விழாவிற்கான ஏற்பாடு குறித்து ஒத்திகை நடத்துவதற்காக தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங் வந்தார். பாம்பன் பாலம் திறப்பு விழா ஏற்பாடுகள் ராமேஸ்வரம் பிளாட்பாரம் பணி மும்முரம்*

*சிறப்பு ஆய்வு ரயில் மூலம் ராமேஸ்வரம் வந்த அவர், ரயில் நிலையத்தை ஆய்வு செய்த பின் செய்தியாளரிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: வரும் ஏப்ரல் 6ம் தேதி ராமநமமி அன்று பிரதமர் நரேந்திர மோடி பாம்பன் புதிய ரயில் பாலத்தை திறந்து வைக்க இருக்கிறார்.*

*அதற்கான முன்னேற்பாடுகள் குறித்து இன்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பிரதமர், ராமேஸ்வரத்திலிருந்து தாம்பரம் செல்லும் சிறப்பு ரயிலை கொடி அசைத்து தொடங்கி வைக்கிறார். பாம்பன் கடலில் உள்ள பழைய ரயில் தூக்கு பாலம் மோசமான நிலையில் இருப்பதால் பாலத்தை அகற்றுவதில் சிரமம் இருக்கிறது.*

*அதனை அகற்றுவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும். ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையேயான ரயில் சேவை பணிகள் குறித்து நடைமுறை சிக்கல்கள் இருப்பதால் மாநில அரசுடன் பேசி விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)*



# சபிக்கப்பட்ட தேசம்!

இந்தியாவில் பெண்களுக்கான பாதுகாப்பு வரவர மோசமாகிக் கொண்டிருக்கிறது. ‘நள்ளிரவில் ஓர் இளம்பெண் உடல் முழுவதும் நகைகளை அணிந்துகொண்டு தனியாக வெளியே செல்லும் நாளே உண்மையான சுதந்திர தினம்’ என்றார் மகாத்மா காந்தி. ஆனால், பகலிலேயே வீட்டைப் பூட்டிக்கொண்டுகூட ஒரு பெண் இருக்க இயலவில்லை. நாட்டைத் தாய்நாடு என்றும், மொழியைத் தாய்மொழி என்றும் சொல்லிக்கொண்டு, நதிகள், குளங்களுக்குப் பெண் பெயர் வைத்து ஆராதிப்பதால் மட்டும் இந்தத் தேசத்தில் பெண்களின் நிலை உயர்ந்துவிடவில்லை.

பெண்கள் இன்னும் ஒரு பாதுகாப்பு வளையத்திலேயே இருக்க வைக்கப்படுகிறார்கள். ஆண்களின் ஆதிக்க மனநிலையும் பெண்கள் குறித்த அவர்களின் கண்ணோட்டத்தில் மாறுதலும் இம்மியளவும் ஏற்படவில்லை. எத்தனையோ பெண்கள் வன்புணர்வு செய்யப்படுவது இன்னும் குறைந்தபாடில்லை.



சபியா என்ற 21 வயது பெண் காவலர் ஐந்து பேர் கொண்ட வக்கிரக் குழுவால் வன்புணர்வு செய்யப்பட்டு, மனம் பதைக்கும் வகையில் கொடூரமாக அங்கங்கள் அறுக்கப்பட்டு மரணம் அடைந்திருக்கிறார். இதை எந்த ஊடகமும் சொல்லக் காணோம். அந்தப் பெண்ணின் நிலையை அவரது உறவினர் சொல்லியிருக்கிறார். அந்தப் பெண்ணின் வாய்வழியாகச் செலுத்தப்பட்ட கத்தி கழுத்து வழியாக வெளியே வந்திருக்கிறது. இன்னொரு கத்தியால் நெஞ்சில் குத்தியிருக்கிறார்கள். கழுத்து முழுவதும் அறுபட்டு சிறிதளவே இருந்திருக்கிறது. அந்தப் பெண் இதைத் தடுக்கப் போராடிய போது அவரது கைகளிலும் கத்தியால் வெட்டியிருக்கிறார்கள். அவரது மார்பகங்கள் அறுக்கப்பட்டு இருக்கின்றன. அவரது பிறப்புறுப்பும் சிதைக்கப்பட்டிருக்கிறது. அவருடன் இருந்த ஆண் நண்பன் என்று சொல்லப்படுபவனைக் காவல்துறை கைது செய்திருக்கிறது.

அவன் கொடுத்த வாக்குமூலத்தில் தானும் அந்தப் பெண்ணும் ரகசியத் திருமணம் செய்து கொண்டதாகவும், அந்தப் பெண்ணின் நடத்தை சரியில்லாததால் தனது நண்பர்களுடன் சேர்ந்து கூட்டுப் பலாத்காரம் செய்ததாகவும் சொல்லியிருக்கிறான். ஆனால், அந்தப் பெண்ணின் சகோதரர் இந்தக் கல்யாணச் செய்தியை மறுத்திருக்கிறார். இந்த வழக்கு பற்றிய மேலதிக விவரங்கள் தெரியவில்லை.

நிர்பயா கொலைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இந்த வழக்கிற்கு இல்லாமல் போனதின் வெறுப்பரசியல் என்ன? அந்தப் பெண் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதாலா?

வன்புணர்வு என்பது கண நேரத் தூண்டலில் பாலியல் செயலில் ஈடுபடுவது என்று சொல்லப்பட்டாலும் பெண் என்பவள் வெறும் உடலாக மட்டுமே பார்க்கப்படுகிறாள் என்பதையே காட்டுகிறது. அந்தப்பெண் ஒருவேளை நடத்தை சரியில்லாதவராகவே இருந்தாலும் அதற்குத் தண்டனை என்பது கூட்டுப் பலாத்காரம் தானா? அப்படியென்றால் ஒரு பெண்ணை இத்தகைய வன்புணர்வுகள் மூலமாக அடக்கி விடலாம் என்று நினைப்பது எத்தகைய கீழ்த்தரமான உணர்ச்சி வெளிப்பாடு?

அந்த மிலேச்சத்தனமான ஆண்களின் வக்கிரம் புனிதமான, கண்ணியமான, பெண்களை மதிக்கும் தேசம் என்று வெளியே வேஷம் போடும் புண்ணிய பூமியில் இருக்கும் ஒட்டுமொத்த ஆணாதிக்க மனோபாவத்தைத்தான் எதிரொலிக்கிறது. ஓர் உயிர் தன்னிடம் இறைஞ்சுவதை ரசிக்கும் குரூர மனப்பான்மை தான் இங்கு புரையோடியிருக்கிறது. ஓர் உயிரின் கண்களில் தெரியும் கெஞ்சலை மதிக்காமல் போகும் குணத்தைத் தான் இந்தச் சமுதாயம் அவர்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறது.

பெண் என்பவள் தாய், தெய்வம், தேவதை என்று ஆண்களால் உயரத்தில் ஏற்றி வைக்கப்படும் அதே நேரத்தில் கீழே ஒரு படுபயங்கரமான பாதாளம் தான் இருக்கிறது என்பதை அதே ஆண்கள் உணர்த்திவிடுகிறார்கள். இது புரியாத பெண்கள் தான் நமது சமூகத்தில் அதிகமாக இருக்கிறார்கள். என்னதான் கத்தினாலும் கூப்பாடு போட்டாலும் இன்னும் பாலியல் கொடூரங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை இது போன்ற சம்பவங்கள் நெற்றியில் அடித்துச் சொல்லி வருகின்றன.

நமது சட்டங்கள் இன்னும் வலுவாக்கப்பட வேண்டும். தண்டனைகள் கடுமையாக இருந்தால் தான் குற்றங்கள் குறையும். நிர்பயா சம்பவத்தில் எல்லா ஊடகங்களும் அதையே உயர்த்திப் பிடித்தன. அந்தக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, சிலர் தூக்கு தண்டனை அடைந்து, சிலர் வெளியே வந்தார்கள். அதே சமயத்தில்தான் புனிதா, வினோதினி என்று சில பல மரணங்களும் தமிழகத்தில் நிகழ்ந்தன. ஆனால், அவையெல்லாம் எந்தக் கவனமும் பெறவில்லை.

ஊடகப்போராளிகளும் சமூக வலைதளப்போராளிகளும் அப்போதைக்குப் பொங்கினார்களே தவிர, அதன் பின் அடுத்தடுத்த பிரச்சினைகள் தலைதூக்கவே அவற்றுக்குப் போராடப் போய்விட்டார்கள். அதேபோல இந்த சபியா வழக்கும் பகிர்வு செய்யப்பட்டு சில நாள் பொங்குதலோடு மறைந்துவிடும். அதன் பின்னர் வேறொரு பெண் வேறொரு பெயரில் வன்புணர்வு செய்யப்படும் வரை யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள். இந்தியா இப்போது சபிக்கப்பட்ட தேசமாகிவிட்டது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

பெண்ணை மதிக்காத எந்தவொரு நாடும் வல்லரசும் ஆகாது. நல்லரசும் ஆகாது. ஊடகங்கள் பாதிக்கப்பட்ட பெண்களின் உண்மையான பெயரையும் புகைப்படத்தையும் பகிரக் கூடாதென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், இந்தச் சமூக வலைத்தளங்களில் இந்தப் பெண்களின் புகைப்படத்தோடுதான் செய்தி பகிரப்படுகிறது. இந்த விஷயத்தை முதலில் மனசாட்சியோடு அணுகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**பெண்ணை மதிக்காத எந்தவொரு நாடும் வல்லரசும் ஆகாது. நல்லரசும் ஆகாது. ஊடகங்கள் பாதிக்கப்பட்ட பெண்களின் உண்மையான பெயரையும் புகைப்படத்தையும் பகிரக் கூடாதென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், இந்தச் சமூக வலைத்தளங்களில் இந்தப் பெண்களின் புகைப்படத்தோடுதான் செய்தி பகிரப்படுகிறது. இந்த விஷ யத்தை முதலில் மனசாட்சியோடு அணுகக் கற்றுக்கொள்ள வேண்டும்.**

இப்போதைய காலகட்டத்தில் மனப்பிறழ்வு என்பது எக்கச்சக்கமாகப் பரவியிருக்கிறது. நன்கு படித்த நாகரீகமான ஆட்கள் தான் இதில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மிருகங்கள் தான் முறையற்ற பாலியல் உறவுகளில் ஈடுபடுகின்றன. ஆனால், மனிதனுக்கு ஆறாவது அறிவு ஒன்று இருக்கிறது. அது பொதுவெளியில் எப்படி நடந்து கொள்வது என்று வழிநடத்தும். ஆனால், இப்போதெல்லாம் பொதுவெளியில் தான் மனிதரின் ஆபாசங்கள் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் அரங்கேறுகின்றன.

அந்த ஐவர் குழுவில் ஒருவனுக்குக்கூட அந்தப் பெண்ணின் மீது இரக்கம் வரவில்லை என்பது எத்தகைய வேதனையான செய்தி. இப்படிப்பட்ட இளைஞர்களை நம்பியா இந்த நாடு வல்லரசுக் கனவைக் காண்கிறது? காலக் கொடுமை. அவன்களின் வீடுகளிலும் பெண்கள் இருக்கத்தான் செய்வார்கள். அந்த நேரத்தில் ஏன் அந்தப் பெண்களின் முகம் ஒரு கணமேனும் அவன்களின் நினைவுக்கு வரவில்லை? அப்படியென்றால் இத்தகையவர்களைச் சுற்றியுள்ள சமுதாயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க இயலவில்லை.

வன்புணர்வோடு நிறுத்தாமல் அந்தப் பெண்ணை அணுஅணுவாகச் சித்திரவதைச் செய்ததில் விளங்குகிறது அவன்களின் வக்கிரமான மனநோய். வேறு எங்கோ இருக்கும் கோபத்தை, தன்னிடம் கிடைத்த ஒரு பொருளைஅக்கக்காகப் பிரித்துப் போடும் ஒரு மனச்சிதைவு கொண்ட வெறிநாய்க் கூட்டம் அது.

இத்தகைய மனப்பிறழ்வு கொண்டவர்களை உருவாக்கியதில் இந்தச் சமுதாயத்திற்கும் பெரும் பங்குண்டு. ஆதிகாலம் தொட்டே பெண்களை வெறும் பண்டமாக மட்டும் பார்க்கும் போக்குதான் பிறழ்வடைந்த உள்ளத்திற்குத் தைரியத்தை அளித்து இத்தகைய படுபாதகத்தைச் செய்ய வழி வகுத்திருக்கிறது. அரசர் காலத்திலும் போரில் தோற்ற அரசரின் அரண்மனைப் பெண்களும் நாட்டுப் பெண்களும் அயலாரின் ‘உடைமையாகவே’ கருதப்பட்டார்கள். ஆடு, மாடு, கோழி, குதிரை, யானை மாதிரி அவளும் ஓர் அஃறிணை என்று தான் நடத்தப்பட்டாள். அவளும் ஒரு சக உயிர். அவளுக்கும் மனம் என்ற ஒன்று இருக்கிறது என்ற சிந்தனை கடுகளவுகூட இல்லாத இந்த இளைஞர்களின் ஆணுறுப்புகளை அறுத்து வீசவேண்டும். காலமெல்லாம் தான் செய்த பாதகத்தை எண்ணி எண்ணி வருந்தி நொடிக்கு நொடி இறக்க வேண்டும்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பத்தொன்பது வயது இளம்பெண் இதேபோல் ஒரு சம்பவத்தில் நாக்கு வெட்டப்பட்டு, (7ஆம் பக்கம் பார்க்க..)

## குடியுரிமை சான்றிதழ் கட்டாயம் தேர்தலில் பெரிய மாற்றத்தை அறிவித்தார் டிரம்ப்!



வாக்காளர் பதிவுக்கு குடியுரிமைக்கான ஆவணச் சான்று கட்டாயம் இருக்க வேண்டும் உள்ளிட்ட தேர்தல் நடைமுறையில் மாற்றங்களை கட்டாயமாக்கும்நிர்வாகஉத்தரவில் அதிபர் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்க அதிபராக டிரம்ப்பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். தினமும் அவர் வெளியிடும் புது புது அறிவிப்புகள் பரபரப்பை கிளப்பி வருகிறது. சட்டவிரோதமாக குடியேறி உள்ளவர்களை கண்டறிந்து நாடு கடத்தும் பணியில் மும்முரமாக செயல்பட்டார்.

இந்நிலையில், வாக்காளர் பதிவுக்கு குடியுரிமைக்கான ஆவணச்சான்று கட்டாயம் இருக்க வேண்டும். தேர்தல் நாளுக்குள் வாக்குச்சீட்டுகளை அனைவரும் பெறுவதை உறுதி செய்தல் உள்ளிட்ட அமெரிக்க தேர்தல் நடைமுறையில் மாற்றங்களை கட்டாயமாக்கும்நிர்வாக உத்தரவில் அதிபர் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டார்.

அதேபோல், 'கூட்டாட்சி தேர்தல்களில்வாக்களிக்கும் தகுதிக்கு பாஸ்போர்ட் போன்ற குடியுரிமை சான்றிதழ் கட்டாயம் இருக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

உள்நாட்டுப்பாதுகாப்புத் துறை, சமூகப் பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் வெளியுறவுத் துறை உள்ளிட்ட கூட்டாட்சி நிறுவனங்களை பணியில் உள்ளவர்களில் குடியுரிமை சான்றிதழ்அல்லாதவர்களை அடையாளம்காண உதவும் தரவுகளை தேர்தல் அதிகாரிகளிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என உத்தரவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

கையெழுத்திட்ட பிறகு வரும் வாரங்களில் தேர்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என டிரம்ப் தெரிவித்தார்.



# தென் கொரியாவில் விடாது எரியும் காட்டுத்தீ: 18 பேர் பலி

சியோல் தென் கொரியாவில் 5 நாட்களை கடந்து கொளுந்துவிட்டு எரியும் காட்டுத் தீயினால் 18 பேர் பலியாகி உள்ளனர்.

தென் கொரியாவின் சான்சியாங்க் பிராந்தியத்தில் நிலவும் மோசமான வறண்ட வானிலை காரணமாக காட்டுத்தீ பற்றியது. 5 நாட்களை கடந்தும் தீ கொளுந்து விட்டு எரிந்து வருகிறது. உய்சங் பகுதியில் 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்த புத்தர் கோவில் தீயில் சிக்கி முழுமையாக சேதம் அடைந்தது.

பலத்த காற்று மற்றும் உஷ்ணமான நிலை காரணமாக, தீ கட்டுக்கடங்காமல் எரிகிறது. காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 18 பேர் பலியாகி இருக்கின்றனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்த அதிகாரிகள் முயற்சித்த வரும் அதே வேளையில், முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அண்டாங் உள்ளிட்ட பல பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற உத்தரவிடப்பட்டு உள்ளது.

தீயைக் கட்டுப்படுத்த 10,000க்கும் மேற்பட்ட தீயணைப்புத்துறை வீரர்கள் களத்தில் இறங்கி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)



## வங்கதேசத்தில் ஆட்சியை கைப்பற்றும் ராணுவம்?

வங்கதேசத்தில் இடைக்கால அரசிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்ற ராணுவம் முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், அரசுக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து, கடந்த ஆண்டு ஆகஸ்டில், அவாமி லீக் கட்சி தலைவர் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்து நம் நாட்டுக்கு தப்பி வந்தார்.

இடைக்கால அரசிடம் இருந்து ஆட்சியை கைப்பற்ற, ராணுவ தலைமை தளபதி வக்கார் உஸ் ஜமான் முயற்சித்து வருவதாக, அந்நாட்டு சமூக ஊடகங்களில் சமீபத்தில் தகவல் பரவியது.

சட்டம் – ஒழுங்கு விவகாரத்தில், அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் மீது ராணுவ தலைமை தளபதி வக்கார் உஸ் ஜமான் அதிருப்தியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், தலைநகர் டாக்கா உட்பட நாட்டின் முக்கிய நகரங்களில், ராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால், ஆட்சியைக் கைப்பற்ற ராணுவம் முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே, ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிப்பதாக வெளியான தகவலை, வங்கதேச ராணுவம் நேற்று இரவு திட்டவட்டமாக மறுத்தது. (ஐ)

## அதிபர் டிரம்ப் அறிவித்த 'கோல்டு கார்டு' திட்டத்திற்கு அமோக வரவேற்பு

அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க அனுமதிக்கும் கோல்டு கார்டு திட்டத்தை, அதிபர் டொனால்டு டிரம்ப் அறிமுகம் செய்துள்ள நிலையில், அதற்கு கடும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. முதல் நாளில் மட்டும் 1,000 கோல்டு கார்டுகள் கேட்டு பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் காலவரம்பின்றி வசிக்க அனுமதிக்கும் கோல்டு கார்டு அறிமுகமாகிறது. இதற்கான மென்பொருளை தொழிலதிபரும் அரசின் சிக்கன நடவடிக்கை குழு தலைவருமான எலான் மஸ்க் வடிவமைத்து வருகிறார். இன்னும் இரண்டு வாரங்களில் மென்பொருள் தயாராகி விடும். அதிபர் டிரம்ப் இதுபற்றி அறிவித்த முதல் நாளிலேயே 1,000 கோல்டு கார்டுகள் விற்பனையாகி விட்டன.

உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 3.70 கோடி பேர் இந்த கோல்டு கார்டை வாங்கும் வசதி படைத்தவர்களாக உள்ளனர். எனவே, 10 லட்சம் கோல்டு கார்டுகளை எளிதாக விற்பனை செய்ய முடியும் என அதிபர் டிரம்ப் கருதுகிறார். இதன் வாயிலாக, பல நாடுகளில் இருந்து, அமெரிக்காவில் வசிக்க விரும்பும் வசதி படைத்தவர்களும், நெருக்கடி நிலையை சந்திப்பவர்களும் வருவார்கள். குற்றவாளிகள், தீயவர்கள் என தெரிய வந்தால், கோல்டு கார்டை ரத்து செய்யும் அதிகாரம் அரசிடம் இருப்பதால், நல்லவர்களாக, சட்டத்தை மதிப்பவர்களாக இருப்பது அவசியம். (ஐ)



## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரு நாட்டு மீனவர் பிரச்சனைக்குச் சுமுகமான தீர்வு எட்டப்படுவது தொடர்பாக முதல் கட்டமாக இலங்கை – இந்திய மீனவர்களிடையே மீனவர்களின் சொந்த முயற்சியில் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து கடந்த வாரம் முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

இதன்போது, இந்திய மீனவ பிரதிநிதிகளை இலங்கை மீனவ பிரதிநிதிகள் பொன்னாடை போர்த்தி வரவேற்றதுடன், இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கி பேச்சுவார்தையை ஆரம்பித்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்தல், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துதல், இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுகின்றமை, இரு நாட்டு மீனவ உறவு தொடர்பில் இதன்போது பேசப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ் ஆகியோர் கொண்ட 5 பேர் கொண்ட குழுவினரும், இலங்கை மீனவர்கள் சார்பில் சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), மரியராசா (முல்லைத்தீவு), ஆலம் (மன்னார்), பிரான்சிஸ் (கிளிநொச்சி), அந்தோனிப்பிள்ளை (கிளிநொச்சி), சங்கர் (மன்னார்), இராமச்சந்திரன் (யாழ்ப்பாணம்), அன்னராசா (யாழ்ப்பாணம்), வர்ண குலசிங்கம் (யாழ்பாணம்) உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழுவினரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். இதேவேளை, தமிழக மீனவர்கள் முதல்கட்டமாக ஒரு மாத காலம் இலங்கைக் கடற்பரப்புக்குள் இழுவை மடி மீன்பிடியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மீனவர்களுக்கு இடையேயான இந்த முதல் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

## தென்னக்கோனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவேற்றிக்கொள்ள முடியும்." – என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். இன்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றுவதற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு 5ஆம் இலக்க அதிகாரிகளைப் பதவி நீக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபரைப் பதவி நீக்கும் வழிமுறைகளையே அரசு பின்பற்றுகின்றது. அதற்கமையவே பொலிஸ்மா அதிபரைப் பதவி நீக்குவதற்கான யோசனையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

75 இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டு சபாநாயகரிடம் யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கமைய 115 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட யோசனை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக இந்த யோசனை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படும்.

அதனையடுத்து 5 நாட்களின் பின்னர் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்படும். அதற்கமைய அடுத்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ள தினத்தை அண்மித்த நாளில் அதாவது ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதி தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்கும் யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

நாடாளுமன்ற அமர்வுக்கு வருகை தராத உறுப்பினர்களும் உள்ளடங்களாக 113 பேரது ஆதரவுடன் இந்த யோசனை நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் 113 வாக்குகளைப் பெற்றுக்கொள்வது அரசுக்கு எந்த வகையிலும் சிக்கலாகாது. எனவே. இதனை ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும். இவ்வாறு இந்த யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து மூவரடங்கிய ஒழுக்காற்று விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படும்.

பிரதம நீதியரசரால் நியமிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையின் கீழ் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்படும் நிர்வாக அறிவுடைய அதிகாரி ஆகியோர் நியமிக்கப்படுவர்.

இந்த விசாரணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பதவி நீக்கும் யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து 113 அல்லது அதற்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவுடன் அதனை நிறைவேற்ற முடியும். இந்த நடைமுறையையே அரசு பின்பற்றி வருகின்றது. நாடாளுமன்றத்தின் இந்த நடைமுறை எந்த வகையிலும் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையாது." – என்றார்.

# வவுனியா சிறையில் உள்ள மீனவர்களை பார்வையிட்ட இந்திய மீனவர் பிரதிநிதிகள்











வவுனியா, மார்ச் 26

வவுனியா விளக்கமறியல சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை இந்திய மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் பார்வை யிட்டுக் கலந்துரையாடினர்.

வவுனியாவுக்கு வருகை தந்த இந்தியாவின் இராமேஸ்வரம் மாவட்டத்தின் இந்திய விசைப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா, இராமேஸ்வரம் பாரம்பரிய விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ஆல்வின் பெர்னாண்டோ, மண்டபம் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த இருதயராஜ் ஜஸ்ரின், தங்கச்சிமடம் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ஜெருசிமான்ஸ், பாம்பன் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ராஜப்பன் சகாயம் ஆகியோர் இன்று பிற்பகல் வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

எல்லை தாண்டியும், சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தியும் மீன்பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 வரையான இந்திய மீனவர்களை அவர்கள் பார்வையிட்டதுடன், அவர்களது தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த மீனவர்களைப் பார்வையிட இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு விசேட ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருந்தனர்.

## யாழ்.பல்கலையில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரணி ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மருத்துவபீடத்துக்கு முன்பாகப் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, பேரணியாகச் சென்ற மாணவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலமாக இந்தக் காலப் பகுதி உள்ளமையால் பேரணிகள் , ஊர்வலங்கள் நடத்த தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறியே மாணவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். "நாம் அரசியல் ஊர்வலம் செல்லவில்லை. வேலைவாய்ப்பு கோரியே போராட்டம் நடத்துக்கின்றோம்." – என்று மாணவர்கள் கூறிய போதிலும், பொலிஸார் பேரணியைத் தொடர்ந்து செல்லவிடாது தடுத்து நிறுத்தினர்.

அதனால் அந்த இடத்தில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்ட நிலையில் , மாணவர்கள் பேரணியைக் கைவிட்டு, பல்கலைக்கழகத்தினுள் திரும்பினர்.

## அமெரிக்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துயரங்கள் மற்றும் உயிரிழப்புக்கள் தொடர்பிலும் எமது ஆழ்ந்த கவலையை அமெரிக்கத் தூதுவரிடம் வெளிப்படுத்தினோம்.

மேலும், மனிதாபிமான விடயங்களை முன்னிறுத்தியும் உலக அமைதிக்காகவும் அமெரிக்கா தனது ஆதரவை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினோம்." – என்றார்.

# சபிக்கப்பட்ட தேசம்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எலும்புகள் நொறுக்கப்பட்டு இறந்தார். அவரது சடலத்தைக் காவல்துறை அவசர அவசரமாக எரித்தது.

இந்திய ஆண்களின் ஆழ்மன ஆளுமையில் ஏதேனும் குறைகள் தென்பட்டால் உடனடியாக ஏதேனும் ஒன்றை வெற்றிகொண்டு தன்னை யாருக்கோ நிரூபிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் அது பெரும்பாலும் எதிர்பாலினத்தைத் தேர்ந்தெடுத்து இம்சைக்கு உள்ளாக்குகிறது. பெண்களை ஒருபோதும் ஆண்களால் படுக்கையில் வெல்ல முடியாது என்ற எண்ணத்தின் விளைவாக அது பெண்ணை 'அடக்கி' வைக்கத் துடிக்கிறது. ஆழ்மன வேட்டை வெறி தலைதூக்கும் போது அது பெண்ணின் மீது முடிகிறது. என்னதான் பெண்களை நான் மதிக்கிறேன். ஆராதிக்கிறேன். சம உரிமை கொடுக்கிறேன் என்று சொல்பவனின் ஆழ்மனதை ஆராய்ந்தால்கூட அங்கும் பெண்ணின் மீதுள்ள வன்மம் பசுத்தோல் போர்த்திக்கொண்டு படுத்துறங்கிக் கொண்டுதான் இருக்கும். தக்க சமயத்திற்காகக் காத்துக்கொண்டுதான் இருக்கும்.

ஒரு குடும்பத்தில் இருக்கும் ஆண் தனது குடும்பப் பெண்களை எவ்வாறு நடத்துகிறான் என்பதை அங்கிருக்கும் ஆண் குழந்தைகள் பார்த்துக் கற்றுக்கொள்கிறார்கள். அவன் பெண்களிடம் எந்தவிதமான வார்த்தைப் பிரயோகங்களால் பேசுகிறான் என்பதையும், பெண்கள் இல்லாத நேரத்தில் அவர்களைப் பற்றிய அவனது கருத்துகளையும் அவர்கள் கவனித்து தங்களது மனதில் இருத்திக்கொள்கிறார்கள். எனவே தனக்கு அடுத்த தலைமுறையை உருவாக்கும் ஆண் தனது பார்வை, பேச்சு, செயல் எல்லாவற்றையும் சரியான முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

பெண் தன்னை வலிமையாகக் கட்டமைத்துக்கொள்ள வேண்டும். உடலிலும் மனதிலும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். தன்னிடம் அத்துமீறுபவர்களைத் தண்டிக்கும் அளவு துணிச்சலை வளர்த்துக்கொள்ள வேண்டும். பெண்ணின் பிரச்சினை பொதுவெளியில் ஆரோக்கியமாகப் பேசப்பட வேண்டும். தன்னைவிட ஆண்கள் ஒன்றும் உயர்ந்தவர்கள் இல்லை என்ற எண்ணத்தை மனதில் ஏற்படுத்த வேண்டும்.

பெண் எந்த நாட்டிலும் பெண்தான். அதேபோல் அவள் எந்த நாட்டிலும் வெறும் போகப் பொருளாகத் தான் இருக்கிறாள். இன்னும் அவளது பாதுகாப்புக்கு, உரிமைக்கு, சுதந்திரத்திற்கு என்று போராடிக்கொண்டுதான் இருக்கிறாள். இந்தப் போராட்டங்கள் நிச்சயம் ஒரு நாள் அவளுக்கு உள்ள உரிமைகளை இயல்பாகப் பெற்றுக் கொடுத்து விடும். ஆணின் கண்ணோட்டத்தில் இருக்கும் இந்த உலகத்தின் பார்வை பொதுமைப்படுத்தப்படும்.

பாலியல் தொல்லைகள், வன்புணர்வுகள், பலாத்காரங்கள் என்று இருக்கும் நிலை மாறி ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அவரவர் இயல்புகளோடு ஏற்றுக்கொள்ளும் நிலை வரும். அதற்காகப் பயணிக்கும் தொலைவு தூரம் தான். என்றாலும் பெண்களின் பயணம் தொடங்கி விட்டது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2025இல் வெளியிடப்பெற்றது.